## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

**14th ஜூலை / July 2024 ஞா யிறு ஆராதனை**

Cell Group Sunday

† **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. ஹென்சி மெல்பின்**
Call to Worship — Mrs. Hency Melbin

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. ஹென்சி மெல்பின்**
Prayer — Mrs. Hency Melbin

† **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

### தீவினை செய்யாதே

*1. தீவினை செய்யாதே மா சோதனையில்*
*பொல்லாங்கனை வென்று போராட்டத்தினில்*
*வீண் ஆசையை முற்றும் கீழடங்குவாய்*
*யேசையரை நம்பிவென்றேகிப் போவாய்*

**ஆற்றித் தேற்றியே காப்பார்**
**நித்தம் உதவி செய்வார்**
**மீட்பர் பெலனை ஈவார்**
**ஜெயம் தந்திடுவார்.**

*2. வீண் வார்த்தை பேசாமல், வீண் தோழரையும்*
*சேராமலே நீக்கி நல்வழியிலும்*
*நின்றுக்கமும் அன்பும் சற்றேனும் விடாய்*
*யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்.*

*3. மெய்விஸ்வாசத்திலே வென்றேகினோன் தான்*
*பொற்கிரீடம் பெற்றென்றும் பேர் வாழ்வடைவான்*
*மா நேசரின் பெலன் சார்ந்தே செல்லுவாய்*
*யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்.*

† **மாறி வாசித்தல் 28ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
*“சங்கீதம் 91”* — Congregation

“சர்வ வல்லவருடைய நிழல்”

Psalter Reading “Psalm 91”

† **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord’s Prayer — Congregation

† **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

### மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா

**மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா**
**மன்னிப்பு மன்னிப்புத் தாருமே - இறைவா**
**மன்னிப்புத் தாருமே இறைவா**

*1. ஆண்டவர் ஆன்மாவை விரும்புகின்றார்*
*மாண்டிட்ட ஆன்மாவைத் தேடுகின்றார்*
*அண்டிடும் பாவிக்கு அருளுகின்றார் - நேரில்*
*வேண்டிடும் துரோகிக்கு இரங்குகின்றார்*

*2. என் சொத்தைத் தந்திடும் என்று கேட்டான்*
*தன் சொத்தைப் பெற்றவன் பயணமானான்*
*தன் இஷ்டம் போலங்கே செலவு செய்தான் - அவன்*
*தன் வாழ்வைப் பாவத்தில் மூழ்கடித்தான்*

*3. பன்றிகள் மேய்த்தவன் தவிடு உண்டான்*
*தன் தந்தை அன்பினைக் கனவு கண்டான்*
*மன்னிப்பு கேட்டங்கே ஓடி வந்தான் - தந்தை*
*மன்னித்து மகனாக அணைத்து ஏற்றார்.*

*4. ஆண்டவர் ஞானத்தில் இனிமையுண்டு*
*கண்டிக்கக் காலத்தைக் கடத்துகின்றார்*
*கண்டித்து கருணைசொல் கூறுகின்றார் - பாவி*
*திருந்திட அருட்கொடை வழங்குகின்றார்.*

*5. குற்றங்கள் இல்லையே என்று சொன்னால்*
*நம்மைத்தான் ஏமாற்றி நலிந்திடுவோம்*
*குற்றங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தால் -தேவன்*
*குற்றத்தை மன்னித்து வாழ்வளிப்பார்*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***திருமதி. கரோலின் ஷீபா***
***I சாமுவேல் 18 : 6 - 16*** — Mrs. Caroline Sheeba
Scripture Reading
1 Samuel 18 : 6 - 16

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

***கண்களை ஏறெடுப்பேன்***

**கண்களை ஏறெடுப்பேன் - மாமேருநேராய் என்**
**கண்களை ஏறெடுப்பேன்.**

**விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்து**
**எண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும்.**

*1. காலைத்தள்ளாட வொட்டார் - உறங்காது காப்பவர்*
*காலைத்தள்ளாட வொட்டார்,*
*வேலையில் நின் றிஸ்ர வேலரைக் காத்தவர்*
*காலையும் மாலையும் கண்ணுறங்காதவர்.*

*2. பக்தர் நிழல் அவரே - எனை ஆதரித்திடும்*
*பக்தர் நிழல் அவரே,*
*எக்கால நிலைமையில் எனைச் சேதப்படுத்தாது*
*அக்கோலம் கொண்டோனை அக்காலம் புரியவே*

*3. எல்லாத் தீமைகட்கும் - என்னை விலக்கியே*
*எல்லா தீமைகட்கும்*
*பொல்லா உலகினில் போக்குவரத்தையும்*
*நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர்.*

***அறிவிப்புகள்***
Announcements

Cell group Presentation

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***I சாமுவேல் 18 : 14***
1 Samuel 18 : 14

***14. தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்;***
***கர்த்தர் அவனோடேகூட இருந்தார்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **⁄ Indicates Congregation standing**